செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 77 நாள்: 8-2-2017

பத்திரிக்கை செய்தி
வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை

நுண்ணீர் பாசனத் திட்டப் பயனாளிகளுக்கு வருவாய் ஆவணங்கள் வழங்கும் சிறப்பு முகாம்

வேலூர் மாவட்டத்தில் குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்திட உதவும் உன்னத திட்டமான நுண்ணீர் பாசன திட்டமானது, தமிழக அரசால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் சிறுகுறு விவசாயிகளுக்கு 100% மான்யத்திலும், ஏனைய விவசாயிகளுக்கு 75% மான்யத்திலும் நுண்ணீர் பாசன அமைப்புகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் கீழ்கண்ட ஆவணங்களுடன் வேளாண்/தோட்டக்கலைத் துறைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பம்
2. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (இரண்டு எண்கள்)
3. குடும்ப அட்டை ஒளிநகல்
4. கணினி சிட்டா (வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டது)
5. அடங்கல்
6. நிலவரைப்படம்
7. தண்ணீர் மற்றும் மண்பரிசோதனை ஆய்வறிக்கை
8. சிறு/குறு விவசாயி சான்று

இதன் தொடர்பாக, விவசாய பெருமக்கள் உடனடியாக, கணினி சிட்டா, அடங்கல், நிலவரைப்படம் மற்றும் சிறு/குறு விவசாயி சான்று ஆகிய ஆவணங்கள் பெற்றிட ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் 11.02.2017 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இச்சிறப்பு முகாமில் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டு தகுதியான விவசாயிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் ஆவணங்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த அலுவலர்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்துக்கொண்டு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவார்கள்.

நுண்ணீர் பாசன திட்டத்தில் பங்குபெற விரும்பும் விவசாய பெருமக்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி இச்சிறப்புமுகாமிற்கு வருகை புரிந்து பயனடைமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

ஓம்./சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சித் தலைவர்

-ஆணைப்படி-

08/02/2017
வேளாண்மை அலுவலர்

G. Thilagavathi
Agrl. officer
O/o PA (Agri)
9443712963

செ.ம.தொ.அ.
வேலூர்-9.
8/2/2017